விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 037 வள்ளுவர் ஆண்டு 2055 தை 11 வியாழக்கிழமை (25.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## நயினை நாகபூசணியின் மஹா கும்பாபிஷேகம்



15

## நாட்டைச் சூறையாடியவர்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர்



(கொழும்பு)

நாட்டைச் சூறையாடியவர்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள். அரசு நாட்டைச் சூறையாடியவர்களை சட்டத்தின் முன் நிறுத்தியிருந்தால் வற்வரியை விதித்து மக்களை நசுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

குறித்த விடயத்தினை அவர் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் 15

## 46 மேலதிக வாக்குகளால்

# இணைய பாதுகாப்பு சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

**நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட இணைய பாதுகாப்புச் சட்டமூலம் 46 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.**

சட்டமூலத்திற்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில், எதிர்க்கட்சியினர் சட்டமூலத்திற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டு சபையில் நேற்று உரையாற்றியிருந்தனர்.

இணைய பாதுகாப்புச் சட்டமூலம் பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பெரும் சர்ச்சைகளுக்கு இது முகங்கொடுத்திருந்தது.

ஊடக நிறுவனங்கள் மட்டுமன்றி, சிவில் சமூக அமைப்புக்கள், சர்வதேச அமைப்புக்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் இதற்கு எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

இதில் ஆளும் தரப்பினர் சட்டமூலத்திற்கு ஆதரவாகவும் ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, உத்தரலங்கா சபாவ, ஜே.வி.பி. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிராக வாக்களித்தன.

அந்தவகையில், குறித்த சட்டமூலத்திற்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில், 46 மேலதிக வாக்குகளால் இது நிறைவேற்றப்பட்டது. (ம-7)

## திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் மக்களது காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

அந்த விகாரையை அகற்றுமாறு கோரி 15

## கட்டாரில் வாகன விபத்து

### யாழ். இளைஞன் மரணம்

(கரணவாய்)

கட்டாரில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தொழில் நிமிர்த்தம் கட்டார் சென்று 26 நாட்களில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் டிபில்ஸ் குமார் துவிகரன் 15

## ஊடக அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் இன்று வியாழக்கிழமை, போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், யாழ்.மத்திய பஸ் நிலையம் முன்பாக வியாழக் கிழமை மாலை 4 மணிக்குப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. 15

## கிளிநொச்சியில் கோர விபத்து ஆசிரியை பலி; 8 பேர் படுகாயம்

### வீதியில் நின்ற 9 எருமை மாடுகள் உயிரிழப்பு



15

## அல்வாயில் இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

### கொள்ளை தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்துவிட்டு திரும்பியபோது சம்பவம்

(கரணவாய்)

கொள்ளைச்சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து விட்டு வீடு திரும்பிய இளைஞர் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்ப 15

## மாங்குளத்தில் கோர விபத்து

### இருவர் படுகாயம்

(மாங்குளம்)

ஏ9 வீதி மாங்குளத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கி 15

## இணுவில் கந்தசுவாமி கோயில் உலகப் பெருமஞ்ச திருவிழா இன்று



(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி ஆலய தைப்பூச உலகப் பெருமஞ்சத் திருவிழா இன்று நடைபெறவுள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 31 - 10 - 1945

இறப்பு 23 - 01 - 2024

## டாக்டர் வைரவநாதன் டேவிட் ரட்ணநாதன்

ஏழாலையை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனாகிய டாக்டர் வைரவநாதன் டேவிட் ரட்ணநாதன் அவர்கள் 23.01.2024செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா சாமுவேல் வைரவநாதன் - கிரேஸ் ரத்னம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற கிருபமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு. திருமதி V. N. ஐயாத்துரை தம்பதியரின் அன்பு மருமகனும் ஜோசப் ரட்ணராஜா, திருமதி றெஜீனா ஸ்டீபன்ஸ், காலஞ்சென்ற கிறிஸ்டி ரட்ணரூபன், டானியல் ரட்ணசேயன், ஜோசுவா ரட்ண வேந்தன் ஆகியோரின் அன்பு சகோதரரும் ஜோதிதாஸ் - ஜெபராணி, கிருபைதாசன் மைதிலி, ஞானாதாசன் - டாக்டர் அரியராணி, தங்கமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 25.01.2024 வியாழக் கிழமை காலை 10 மணிமுதல் மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு பி.ப 2.30 மணிக்கு இறுதி ஆராதனை இடம்பெற்று பின் பி.ப 5.00 மணியளவில் தெஹிவளை வேதமலை மயானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
077 548 7178 (18750) குடும்பத்தினர்

# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04.12.1931 மறைவு 04.02.2004

## அமரர் தயாபரராசா இராசம்மா

கனம் வழங்க முனையப் பெற்றதும்
வமைதின் பல்வகைமையை ஒத்ததாய்
இயல்பும் பலதாய் ஒருங்கமைந்தாள்
அத்தகைமையில் அன்னைதான் சொருபமே
சிந்தனையில் நிகழ்வுகளாக திகழும்
எக்கணமும் மெய்யானதாக மறையாது
தரிக்கத்தான் எண்ணமும் தேடுதே....

# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20.01.1932 மறைவு 26.01.2013

## திருவாட்டி சற்குணராசா செல்வமலர்

வருடங்கள் பல உருண்டு சென்றாலும்
அழியாது உங்கள் திருவுருவம்
கடமைகள் அனைத்தும் நிறைவுற்றது என்றா
காலனவன் உங்களை கவர்ந்திழுத்து
எம்மை மீளாத் துயிலில் ஆழ்த்திவிட்டான்
விதியவன் வினைப் பயனால்
மீளாத் துயில் கொண்டீரே
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரே!

இல. 23, 6ம் ஒழுங்கை, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (18752)

தகவல்
குடும்பத்தினர்

# பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு கொத்து றொட்டி போடுதல், பிறைட்றைஸ் தயாரித்தல், றொட்டி வேலை செய்தல், உணவு பரிமாறுபவர்கள் போன்ற வேலைகளில் மிகவும் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை. (C-8202)

**077 649 1027**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

# லங்கா மஹறால்(PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1800/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2150/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். (18751)
நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
077 8393 974

# கார், வான் விற்பனைக்கு

கார் மற்றும் GN - XXXX நிசான் செரினா, மோட்டார் சைக்கிள் ஆகிய வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : (18733)
**076 748 3028**
**077 255 7761**

# வீடு வாடகைக்கு தேவை

கந்தர்மடம் அல்லது கந்தர்மடத்தை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு : (18742)
**076 436 0042**

# இணுவைக் கந்தனின் தைப்பூச உலகப் பெருமஞ்ச திருவிழா



வேலனே என்று தினம் வேண்டிடும் அடியவர்க்கு
வேண்டும் வரம் தந்திடுவார் பாருமே!

இன்று நடைபெறும் திருவிழா சிறக்க
வாழ்த்துகின்றோம்.

## வேலு அன் கோ

வெதுப்பக உற்பத்திகள், இதர இனிப்பு பண்டங்கள் மற்றும் பத்திரிகைகள் இன்னும் பல பொருட்கள்

(C-8200) இணுவில் மேற்கு, மருதனார்மடம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தராக கடமையாற்றும்

## அமரர் திருநாவுக்கரசு கார்த்திகேயன்

நீர் விழி தோய! நீங்கா நினைவுகள் மிளிர நின்
பிரிவின் காலம் இன்று வந்ததோ?
இதயங்களெல்லாம் நொருங்க இமைகளெல்லாம் நனைய
எங்களைத் தவிக்கவிட்டு எங்கோ நீ பயணமானாய்..!

தி.கார்த்திகேயன் அவர்களின் 23.01.2024 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 28.12.1982 மறைவு 23.01.2024

பிரிவுத்துயருடன்...
பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை. (C-8201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பெருமஞ்சம் இணுவில் கந்தசுவாமி கோவில்

# தைப்பூசம் இன்று

இன்று காலை 6.00 மணி தொடக்கம் பால்குட அபிஷேகம், 1008 சங்காபிஷேகம், சண்முகார்சனை, விசேட பூஜை, வழிபாடுகள், இசைக்கச்சேரி, பொங்கல் என்பன 3 மணிவரை இடம்பெறும்மாலை 6.30 மணிக்கு நூற்றாண்டு பழைமை வாய்ந்த உலகபெருமஞ்சத்தில் முருகப்பெருமான் வலம் வரும் காட்சியும் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும். தைப்பூச தினத்தில் முருகப்பெருமானை வேண்டி செய்யும் நேர்த்திகள், வழிபாடுகள் நிச்சயம் நிறைவேறும் என்பது நம்பிக்கை.




விளம்பர அனுசரணை

**TELESOON Phone Shop & Textails** HOTLINE 075 757 5715

No,31c K.K.S road, Chunnakam. 021 224 1552

1st floor Square Building Jaffna. 021 221 5793

Station Road Chunnakam Junction. 021 222 4477

Head Office- no13 Municipal building, Kasthuriyar Road Jaffna. 021 221 7995

**அக்ஷய FOOD CITY**

T.P: 077 411 2984, 021 224 1510

K.K.S. Road, Inuvil

**நவரத்தினம் தச்சுத் தொழிலகம்**

மரத்தளபாட விற்பனை நிலையம்

கே.கே.எஸ் வீதி,

கோண்டாவில் மேற்கு, T.P: 077 713 0872

இணுவில். 075 850 0260


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## எதிரணி வீரர்களை பந்தாடிய லிவர்பூல் அணி




பிரீமியர் லீக் தொடரில் லிவர்பூல் அணி 4-0 என்ற கோல் கணக்கில் போர்னேமௌத் அணியை வீழ்த்தியது.

புள்ளிப்பட்டியலில் 12ஆவது இடத்தில் உள்ள போர்னேமௌத் அணி, முதலிடத்தில் உள்ள லிவர்பூல் அணியை எதிர்கொண்டது.

விற்றாலி மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியின் முதல் பாதி கோல்கள் இன்றி 0-0 என முடிந்தது. ஆனால், இரண்டாம் பாதியில் லிவர்பூல் அணியின் வீரர்கள் மிரட்டினர்.

49 ஆவது நிமிடத்தில் அந்த அணியின் பிராவின் விரைவாக செயற்பட்டு கோல் அடித்தார். அதனைத் தொடர்ந்து, டிகோயோட்டா 70ஆவ்து நிமிடத்தில் ஒரு கோலும் மேலும் அவரே 79ஆவது நிமிடத்தில் தனது இரண்டாவது கோலை அடித்து அசத்தினார். ஆட்டத்தின் இறுதி நிமிடங்களில் (90+3) சமநிலையாக மீண்டும் ஒரு கோல் அடிக்க, லிவர்பூல் 4-0 என்ற கோல் கணக்கில் மிரட்டலான வெற்றி பெற்றது. (நி-5-6)

## கப்டன்ஷிப் தொடர்பில் மனம் திறந்தார்-பும்ரா



டெஸ்ட் கிரிக்கெட் விளையாடுவதும் அதிலும் கப்டனாக அணியை வழி நடத்துவுதும் மிகவும் சிறந்த ஒன்று என இந்திய அணியின் பந்து வீச்சாளர் பும்ரா தெரிவித்தார்.

போட்டியில் நாங்கள் தோல்வியை தழுவினாலும் எனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நினைத்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் எல்லா முடிவுகளிலும் ஈடுபடுவதை நான் மிகவும் விரும்பினேன். கப்டன்ஷிப் வாய்ப்பு கிடைத்தால் யார் தான் செய்ய மாட்டார்கள். இந்நிலையில் தனக்கு கொடுக்கப்பட்ட கப்டன் பதவி குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்ததாக பும்ரா தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி விளையாடுகிறது. இரு அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி நாளை ஐதராபாத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அவுஸ்திரேலியாவில் பேட் கம்மின்ஸ் வேகப்பந்துவீச்சாளராக இருந்து கொண்டு அணியை சிறப்பாக வழி நடத்துகிறார். வேகப்பந்து வீச்சாளர்கள் புத்திசாலித்தனமான வீரர்கள். அவர்கள் கடினமான வேலையை பார்க்கிறார்கள். போட்டியில் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து அவர்களுக்கு நிச்சயம் தெரியும் எனவும் பும்ரா தெரிவித்தார். (நி-5-6)

## இளையோருக்கான உலகக்கிண்ணம்; சிம்பாவேயை வீழ்த்திய இலங்கை



19 வயதிற்கு உட்பட்ட ஆடவருக்கான உலகக் கிண்ண தொடரில் சிம்பாவே அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவே அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்ய இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதன்படி 48.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து இலங்கை இளையோர் அணி 204 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அவ்வணி சார்பாக திநுர 60 ஓட்டங்களையும் தமிழ் வீரரான சாருஜன் சண்முகநாதன் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

தொடர்ந்து 205 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கோடு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாவே இளை யோர் அணி 21.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 89 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அவ்வணி சார்பாக துடுப்பாட்டத்தில் மத்தேயு ஷொங்கன் 27 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக மல்ஷா தருபதி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

19 வயதிற்கு உட்பட ஆடவருக்கான உலகக் கிண்ண தொடரில் முதலாவது போட்டியில் வெற்றியை பதிவு செய்து குழு சி பிரிவில் 2 புள்ளிகளோடு இலங்கை இளையோர் அணி முதலிடத்தில் உள்ளது. (நி-5-6)

## ஆஸி வீரர்களை துரத்தும் கொரோனா




வெஸ்ட் இண்டீஸ் அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள், 3 இருபது - 20 போட்டிகளில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதில் முதலில் டெஸ்ட் தொடர் நடைபெற்றது. முதல் டெஸ்ட்டில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


இதனையடுத்து இரு அணிகளுக்கு இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி இன்று பகல்- இரவு போட்டியாக ஆரம்பமாகவுள்ளது.


இந்நிலையில் அவுஸ்திரேலிய அணியின் ஓல் ரவுண்டர் கேமரூன் கிரீன் மற்றும் பயிற்சியாளர் ஆண்ட்ரூ மெக்டொனால்ட் ஆகியோர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அடுத்த 24 மணி நேரத்தில் நெகடிவ் முடிவு வரவில்லை என்றாலும் அவர்களால் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாட முடியும் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரிய விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே அவுஸ்திரேலிய வீரர் டிராவிஸ் ஹெட் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினா தீவு நாகபூஷணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்றைய தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்தனர். (நி-5-6-33)

# நல்லூர் ஆலய நெற்புதிர் அறுவடை





நல்லூர் கந்தன் ஆலய நெற்புதிர் அறுவடை நிகழ்வு நேற்று புதன்கிழமை மறவன்புலவு வயல்நிலத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆலய அறங்காவலரும் சிவாச்சாரியாரும் கலந்து கொண்டனர். மேலும் இப்புதிர் விழா 290ஆவது ஆண்டாக இவ்வருடம் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்நிலை காப்பு சட்டத்திற்கு எதிராக யாழில் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)
அரசாங்கத்தினால் முன் வைக்கப்பட்டுள்ள நிகழ் நிலை காப்பு சட்டமூலத் துக்கு எதிராக நேற்று புதன்கிழமை காலை யாழ். பேருந்து நிலையத்திற்கு முன்பாக யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயகத்தை அச்சுறுத்தாதே, நிகழ்நிலை காப்புச் சட்டத்தை மீளப் பெறு, ஊடகங்களை சமூக ஊடகங்களை நசுக்கும் நிகழ் நிலை காப்புச் சட்டத்தை மீளப்பெறு போன்ற பல கோரிக்கைகள் போராட்டக் காரர்களால் வலி யுறுத்தப் பட்டது.

நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் தொடர்பில் பாராளு மன்றில் விவாதம் நடை பெற்று வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (நி-5-6-33)

# தற்காலிக வீதித்தடை

(யாழ்ப்பாணம்)
இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூச மஞ் சத்திரு விழாவை முன்னிட்டு தற்காலிக வீதித்தடை மேற்கொள்ளப்படவுள்ளதுடன் அதற்கான மாற்ற வீதி ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைவாக இன்று காலை 5 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை கே.கே.எஸ் வீதியுடன் இணை யும் இணுவில் மானிப்பாய் வீதி, ஆலய இருமருங்கும் உள்ள உள்ளக வீதிகளில் வாகனத்தடை விதிக்கப் பட்டுள்ளது.

அதற்கு மாற்று வழியாக கே.கே.எஸ் வீதியுடன் இணைந்த கெக்கிலிப்பாய் வீதி, செட்டிவீதி பயன்ப டுத்த முடியும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித் துள்ளனர். (நி-5-6)

# நெல்லியடி நகர்ப் பகுதியில் ஒளிராத நிலையில் மின்விளக்கு

(கரணவாய்)
நெல்லியடி நகர்ப்பகுதி யில் உள்ள பிரதான வீதி களில் மின்விளக்குகள் கடந்த மூன்று நாட்களாக முற்றாக செயல் இழந்த நிலையில் காணப்படுவத னால் இரவு வேளைகளில் அவ்வீதியால் பயணிப்போர் சிரமத்துக்குள்ளாகியுள்ள னர்.

இச்சூழலை கருத்தில் கொண்டு திருடர்களின் கைவரிசை அதிகரித்துள் ளது. மேலும் வீதி விபத் துக்கள் ஏற்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் குறித்த பகுதியில் உள்ள மின்விளக் குகளை சீர் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (நி-5-6-60)



மாவிட்டபுர கந்தசுவாமி கோவிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 24 அடி உயரம் கொண்ட திருமஞ்ச வெள்ளோட்டம் நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3022

**யதவன்**

மாட்டை அடக்கும் வீரனுக்கு
பரிசாக கார் ,பைக் தர்றது போல ...



மனைவியை அடக்கும் வீரனுக்கு பஸ்ஸோ ,லாரியோ
தருமாறு கேட்டுக் கொள்கிறேன்

**மிதுனா**


ரொம்ப நேரமா குக்கர்ல விசில் வரவே
இல்ல ?

சரி என்ன பண்ணுனீங்க ?


நானே மூணு விசில அடிச்சு சோத்த
இறக்கிட்டேன்!




**தர்மினா**




**யதுர்சிகா**




**கிருத்திகா**




அது எப்படி திமிங்கலம் கல்லும்
கண்ணாடியும் மோதினா உடையாம இருக்கும்

**அகிந்தன்**

நல்லா உட்கார்ந்து யோசித்து
பார்த்தால் தான் புரியுது




நமக்கு லைப்ல blood group மட்டும் தான்
possitve ah இருக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் [illegible] பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவை கந்தனின் உலகப் பெருமஞ்சம் இன்று



இணுவைக் கந்தன் ஆலயம் காலத்தால் முற்பட்ட தன்மையைக் கொண்ட சரித்திரப் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயம். இலங்கையில் உள்ள ஆறுபடை வீடுகளில் ஒன்றாகக் காணப்படும் இவ்வாலயம் காஞ்சிபுரத்தில் நின்றும் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு வந்த திருக்கோவலூர் பேராயிரமுடையோன் என்பவரால் அன்னாரது குலதெய்வமான காஞ்சிபுரம் கந்த கோட்டத்து இறைவன் வேண்டுதலுக்கு அமைய நிறுவப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதனால் இவ்வாலயம் இணுவைக் காஞ்சி எனவும் இணுவைக் கந்தகோட்டம் எனவும் பெயர் பெற்றுள்ளது. "துதி செய்யும் காஞ்சிப் பதியில் வாழ் முருகா" என முருகேசு கணபதிதாசன் என்னும் கவிஞன் தான் இயற்றிய இணுவை முருகன் பக்தி அருட்கீர்த்தனை என்னும் நூலில் உள்ள பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். இக்கீர்த்தனைப் புத்தகம் வெளியிடப்பட்டது 1945ஆம் ஆண்டு காலப்பகுதியாகும்.

இப்பேராயிரமுடையோன் முதலியால் அமைக்கப்பட்ட வணக்கஸ்தலம் அந்நியர் ஆட்சிக் காலத்தில் சிதைவுற்றுப் போக அவரது வழியில் வந்த குழந்தையர் வேலாயுதர் என்பவரது கனவில் முருகப் பெருமான் தோன்றி தான் காஞ்சிபுரத்தில் நின்றும் வருவதாகவும் உனது மூதாதையர்கள் என்னை வணங்கியது போல நீயும் என்னை வணங்குவாயாக எனக் கூறி நான் இருந்த இடத்தை உன்னுடைய வெற்றிலைத் தோட்டத்தில் நொச்சித்தடி ஊன்றி காலால் மிதித்து அடையாளமிட்டிருப்பேன் எனக்கூறி மறைந்ததற்கமைவாக அமைக்கப்பட்ட ஆலயமே இன்றும் நாம் காணும் இணுவில் கந்தசுவாமி கோவில். இது நிகழ்ந்தது கி.பி. 1735 என ஆலயக் கல்வெட்டு சான்று பகர்கின்றது. ஆலயத்தின் உறுதியின் பெயரும் "நொச்சி யொல்லை மிதியன்" எனக் காணிப்பெயர் குறிக்கப்பட்டு மேற்படி நிகழ்வினை ஆதாரப்படுத்தி அமைகின்றது.

இத்தகைய காலத்தால் முற்பட்ட ஆலயத்தில் கி.பி 1860ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவதரித்த சுப்பிரமணியம் சந்நியாசியாரால் (பெரிய சந்நியாசியார்) இறைவன் திருவருளுக்கேற்ப அமைக்கப்பட்டதே இன்று நாம் காணும் உலகப் பெருமஞ்சமாகிய இணுவைத் திருமஞ்சம். இம்மஞ்ச வேலைகள் ஆரம்பமாகிய காலம் 1896ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் உத்தர நட்சத்திரத்தன்று எனவும் திருப்பணி நிறைவெய்திய காலம் 1909ஆம் ஆண்டு எனவும் நூல்கள் மூலம் அறியக் கிடைக்கின்றது.

மஞ்சத்திருப்பணி நிகழ்ந்த இடம் மஞ்சத்தடி என்னும் காரணப் பெயர் கொண்டு இன்றும் அழைக்கப்படுகின்றது. இவ்விடத்தில் பெரிய சந்நியாசியாரின் ஜீவசமாதி அமைக்கப்பட்டு தற்போது வேல் தாங்கிய மூலவரைக் கொண்ட ஆலயமாகி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலாக விளங்குகின்றது.

இத்திருமஞ்சத்தை அமைத்த பெரியார் சுப்பிரமணியம் சந்நியாசியார் ஒரு சித்தர். அவரது சித்து விளையாடல்களைக் கூறப்புகின் அது ஒரு புத்தகமாகவே அமைந்து விடும்.

மஞ்சம் செய்வதற்கு ஆளணி வேண்டுமேயென எண்ணிக்கொண்டிருந்த சந்நியாசியாரின் கனவில் முருகப் பெருமான் தோன்றி குறித்த தினத்தில் காங்கேசன்துறைக்குச் செல். அங்கு உன் குறை தீரும் எனப் பணித்தருளினார். இதற்கிணங்க இறைவன் ஆணைப்படி குறித்த தினத்தில் காங்கேசன்துறை துறைமுகத்தைச் சென்றடைய அங்கே கப்பல் மூலம் வந்திறங்கிய சிற்ப வல்லுநர்கள் நீங்கள் எம்மில்லம் வந்து கூறியமைக்கமைய நாம் இங்கு வந்துள்ளோம்.

நீங்களும் வந்து எங்களைச் சந்தித்தீர்கள் என சந்நியாசியாரிடம் கூறி அன்பு பாராட்டினர். சந்நியாசியாரோ மௌனியாகி "நான் இணுவிலை விட்டு எங்கும் போகவில்லையே இது இறைவன் செயற்பாடே" என எண்ணி உவகையுற்றார். சிற்பாசாரியார்களை வரவேற்று அழைத்துக் கொண்டு இணுவில் சென்று மஞ்ச வேலைகளை ஆரம்பித்தார்.

இத்தகைய காலத்தால் முற்பட்ட இணுவைத் திருமஞ்சம் சைவ உலகின் முதல் மஞ்சமாகவும் அற்புத வேலைப்பாடுகளுடன் கூடிய 40 அடி உயரத்தைக் கொண்டும் காணப்படும் சிற்பக் களஞ்சியமாகவும் திகழ்வதால் உலகப் பெருமஞ்சமாகப் போற்றப்படுகிறது. கீழ் ஏழு உலகத்தையும் மேல் ஏழு உலகத்தையும் குறிக்கும் பிரபஞ்சத் தத்துவமாக 14 உலகங்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்வதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இணுவில் கந்தன் ஆலயச் சூழலில் செகராசசேகர மன்னனின் மைத்துனனும் முதல் மந்திரியுமான அரசகேசரி என்பவனால் ஒரு தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டது. அதற்கு சங்குவேலி என்னும் நிலப்பரப்பு அவனால் தானமாக வழங்கப்பட்டது. காலப்போக்கில் அவனால் உருவாக்கப்பட்ட தமிழ்ச்சங்கம் சிதைந்து போனாலும் மானியமாக வழங்கப்பட்ட சங்குவேலி நிலப்பரப்பில் இன்றும் நெல்லானது அறுவடை செய்யப்பட்டு, புதிர் எடுத்து தைப்பூசத்தன்று தமிழ்த் தெய்வமாம் இணுவைக் கந்தப் பெருமானுக்குப் பொங்கிப் படையலிடப்படுகின்றது.

இப்பெருமஞ்சமானது இவ்வாலயத்தில் வருடத்தில் இரு தடவைகள் திருவீதியுலா வருகின்றது. ஒன்று ஆனி அமாவாசைத் தினத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டாடும் மஹோற்சவத் திருவிழாவின் பன்னிரெண்டாம் திருவிழா. மற்றையது தைப்பூசத் திருவிழா.

**இவ்வருடத்து தைப் பூசத் திருவிழா 25.01.2024 இன்று வியாழக்கிழமை பூரணை நாளில் அமையப் பெற்றுள்ளது. அன்றைய தினம் காலை பாற்குடப் பவனியும் மதியம் பொங்கல் நிகழ்வும் மாலை 6.30 மணியளவில் திருமஞ் சத் திருவீதியுலாவும் இடம் பெறும்.** சிற்பத்திறனும் அழகு வர்ணமும் ஒளிரும் திருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராய் வீற்றிருந்து, தவில், நாதஸ்வர இசை முழங்க, முரசொலிக்க, சங்குநாதம் முழங்க காவடிகளும் கூத்துக்களும் புடைசூழ அன்பர்களது கூட்டுப் பிரார்த்தனை ஓசை மனதை நிறைக்க, திருவீதியுலா வரும் காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும்.

சூரனை சங்காரம் செய்வதற்கு முன் அவனது கோட்டைக்கு அரணாகவிருந்த கிரவுஞ்ச கிரியை முருகப்பெருமான் வேல் கொண்டு தகர்த்த திருநாளாகிய தைப்பூசத் திருநாளில் எமது பாவங்கள், துயரங்கள், இன்னல்கள் யாவும் பொடிபட வேண்டி, மஞ்சத்தில் அமர்ந்து அருள்பாலிக்கும் சண்முகப் பெருமானை வேண்டித் துதிப்போமாக.

**ஞான ஏந்தல்**
**மா.ந.பரமேஸ்வரன்.**

# இராசிபலன்

**25.01.2024**
**தை 11, வியாழக்கிழமை**
**பூரணை முன்னிரவு 11.57 மணிவரை**
**புனர்பூசம் முற்பகல் 9.05 மணிவரை**

**சுபநேரம் -8.06-9.36 மணிவரை**
**இராகுகாலம்-2.06-3.36 மணிவரை**
**பூரணை விரதம்,தைப்பூசம்**

**சந்திராஷ்டமம்**
**கேட்டை.**

**வளவன்**

**மேஷம்**: பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**ரிஷபம்**: தேகநலனில் கொஞ்சம் அக்கறை தேவை, தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாடு குதூகலம் தரும்.

**மிதுனம்**: தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கு நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**கடகம்**: கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் தேவை, எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**சிம்மம்**: சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், திடீர் பயணமொன்று ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி**: சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்**: குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**: சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**தனுசு**: கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்**: நிம்மதிக்காக ஆலய வழிபாட்டை மேற்கொள்வீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நினைத்த காரியம் நிறைவேறும் நாள்.

**கும்பம்**: நம்பிக்கைகள் நடைபெற கந்தனை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்**: தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.


**சுறுசுறுப்போடு செயற்படும்போதுதான் மனிதன் வெற்றியடைகிறான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஏ.ஐ.தொழில்நுட்பத்தில் கண்களை சிமிட்டும் ராமர்

### வைரலாகும் காணொளி



(டில்லி)

அயோத்தியில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள பால ராமரின் சிலை கண்களை சிமிட்டி, சிரித்துக் கொண்டே தலையை திருப்புவது போன்ற காணொளி சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது.

பரபரப்பாக பேசப்பட்டு வரும் ஏ.ஐ தொழில்நுட்பத்தின் மூலம் ராமர் சிலைக்கு புதிய பரிமாணம் கொடுக்கப்பட்டுள்ளது.

அயோத்தியில் கடந்த திங்கட்கிழமை பிரம்மாண்டமாக கட்டப்பட்டிருக்கும் கோயிலில் பால ராமரின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த சிலையை மைசூர் சிற்பி அருண் யோகிராஜ் வடிவமைத்திருந்தார். உலகம் முழுவதும் பேசுபொருளாகவுள்ள ராமரின் சிலை அனைவரையும் கவர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் மக்கள் பார்வைக்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பதால் குழந்தை முகத்துடன் புன்னகையுடன் ஜொலிக்கும் ராமரைக் கண்டு மக்கள் மனம் நெகிழ்ந்தனர்.

இந்நிலையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ராமருக்கு உயிரோட்டம் அளித்துள்ள காணொளி அனைவரையும் ஈர்த்துள்ளது.

இதில், ராமர் சிலை கண்களை சிமிட்டி, தலையை அசைத்து சுற்றி பார்ப்பது போல் உள்ளதால் மக்கள் பார்த்து பரவசமடைகின்றனர்.

மேலும், இந்த காணொளிக்கு கீழ் ஜெய் ஸ்ரீ ராம் என கருத்துக்களை மக்கள் பதிவிட்டு வருகின்றனர்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை சில தவறான காரணங்களுக்காக பயன்படுத்தி வரும் நிலையில் இந்த செயல் அனைவர் மத்தியிலும் பாராட்டை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## அமெரிக்க, பிரித்தா… நாட்டை விட்டு ெ…

### ஹவுதி கிளர்…

(சனா)

**ஏமன் நாட்டை விட்டு ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்க, பிரித்தானிய அதிகாரிகளை வெளியேறுமாறு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் உத்தரவிட்டுள்ளனர்.**

காசா மீதான இஸ்ரேலிய படைகளின் தாக்குதல்களை கண்டிக்கும் முயற்சியில் செங்கடல் வழியாக செல்லும் வர்த்தக கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடர் தாக்குதல்களை நடத்தி வந்தனர்.

அதன்பின்னர் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தளங்களின் மீது கடந்த 11 ஆம் திகதி அமெரிக்கா மற்றும் பிரித்தானிய படைகள் இணைந்து தாக்குதல்களை முன்னெடுத்தனர்.

அ… அனை… மற்… இவை… இவை… தாக்… இ… கால…

## மண்சரிவில் புதையுண்ட 31 பேரின் உடல்கள் மீட்பு



(பீஜிங்)

சீனாவின் யுன்னான் மாகாணத்தின் ஜாடோங் நகரில் லியாங்ஷுய்குன் கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை மண்சரிவு ஏற்பட்டது. இம்மண் சரிவில் 10 இற்கும் மேற்பட்ட வீடுகளை சேர்ந்த 47 பேர் மண்ணுக்குள் புதைந்தனர்.

மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டதை யடுத்து, மண்ணில் புதையுண்ட 31 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மற்றவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## காசாவின் முக்கிய நகரத்தை சுற்றிவளைத்த இஸ்ரேல் இராணுவம்

(காசா)

காசாவின் 2 ஆவது மிகப் பெரிய நகரமான கான்யூனிஸை இஸ்ரேல் இராணுவம் சுற்றிவளைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்புப் படை வெளியிட்டுள்ள அறிக்கையில் "கான்யூனிஸ் நகரை இஸ்ரேல் படையினர் சுற்றி வளைத்துள்ளனர்.

காசாவுக்குள் மேலும் முன்னேறிச் செல்வதற்கான இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இந்நகரம் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மக்கள் நெருக்கம் அதிகம் நிறைந்த பகுதியில் ஹமாஸ் குழுவினருக்கும் இஸ்ரேல் படையினருக்கும் இடையே கடுமையாக மோதல் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலத்தில் 200 இற்கு மேற்பட்ட இஸ்ரேல் வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை இஸ்ரேல்- ஹமாஸுக்கு இடையிலான போரில் இதுவரை 25,490 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானிய ஐ.நா அதிகாரிகள்
# வெளியேற வேண்டும்

## ளர்ச்சியாளர்கள் உத்தரவு

கிய
க்க,
ளை
ிளை
ட்டு



அத்துடன், மீண்டும் அண்மையில் அமெரிக்கா மற்றும் பிரித்தானிய படைகள் இணைந்து ஈரானுடன் இணைந்த குழுவுக்கு எதிராக தாக்குதல் நடத்தினர்.

இந்நிலையில், ஒரு மாத கால அவகாசத்திற்குள் ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் இருக்கும் அதிகாரிகளில், பிரித்தானிய குடியுரிமை கொண்டோர் மற்றும் அமெ ரிக்க குடியுரிமை கொண்ட அதிகாரிகள் உடனடியாக ஏமனைவிட்டு வெளியேறு மாறு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் படை உத்தரவிட்டுள்ளது.

மேலும், குறித்த தகவலை ஐக்கிய நாடுகள் சபை செய்தி நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஹெலிகொப்டர் விபத்தில் மூவர் பலி,4 பேர் படுகாயம்

## கனடாவில் துயரம்



(ஒட்டாவா)

கனடாவில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். கனடாவின், பிரிட்டிஸ் கொலம்பிய மாகாணத்தில் விபத்து இடம் பெற்றுள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரில் பயணம் செய்த மேலும் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்கள், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கனேடிய பாதுகாப்பு துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் விபத்து தொடர்பிலான விபரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப் படவில்லை. மேலும், சுற் றுலா நிறுவனமொன்றின் ஹெலிகொப்டரில் பயணித்தவர்களே இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர். (நி-5-6)

த
ம்

இஸ்
த்துள்

இஸ்
இடை
வரை
யிரிழ
குறிப்
-5-6)



# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

## 6 பேர் உயிரிழப்பு



(கீவ்)

உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் கார்கீவ் ஆகிய நகரங்களை குறிவைத்து ரஷ்யா தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் கீவ் நகரில் ஒருவரும் கார்கீவ் நகரில் 5 பேரும் பலியானதாகவும் ஏராளமானோர் காயமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.


இந்த தாக்குதலில் குடியிருப்பு கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. குறிப்பாக கார்கீவ் நகரில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் இடிந்து தரை மட்டமானது.

இடிபாடுகளில் பலர் சிக்கியிருப்பதால் பலி எண்ணிக்கை அதிகமாகலாம் என அஞ்சப்படுகிறது.

ரஷ்யா உக்ரைனில் உள்ள குடியிருப்பு பகுதிகளை குறிவைத்து தாக்குதலை நடத்தியதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# உருகும் பனிக்கட்டிகளால் வெளிவரவுள்ள ஜாம்பி வைரஸ்கள்

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை



அந்தாட்டிக்காவில் பனிக் கட்டிகள் உருகுவதால் ஜாம்பி வைரஸ்கள் வெளியே வர வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

உலகில் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக செயலற்றிருக்கும் வைரஸ்கள் ஜாம்பி வைரஸ் என்று அழைக்கப்படுகிறது.

48,500 ஆண்டுகளாக செயலிழந்து பனிக் கட்டிகளில் புதைந்திருந்த ஜாம்பி வைரஸ்களை ஆராய்ச்சியாளர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு கண்டறிந்தனர்.

இந்த வைரஸ்கள் மனிதர்களுக்கு பேரழிவை ஏற்படுத்தலாம் என கூறப்படும் நிலையில் இது குறித்த ஆராய்ச்சிகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

இந் நிலையில், அந்தாட்டிக்கா மற்றும் பிற இடங்களில் பனிக் கட்டிகளுக்கு அடியில் புதைந்திருக்கும் வைரஸ்களால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

அந்தாட்டிக்காவில் பனிக் கட்டிகள் உருகுவதால் ஜாம்பி வைரஸ்கள் வெளியே வர வாய்ப்புள்ளது.

இதனால் பேரழிவு தரும் உலகளாவிய சுகாதார அவசர நிலையைத் தூண்டக் கூடும் என்றும் புவி வெப்பமடைதல் காரணமாக அதிகரித்து வரும் வெப்பநிலையால் உறைந்த பனிக்கட்டிகள் உருகத் தொடங்கியதில் இருந்து இந்த அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களை பிற்போட திட்டமிடும் அரசாங்கம்

## ஜயசுமண குற்றச்சாட்டு



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் செயற்பாட்டின் அடிப்படையில் தேர்தல்களைப் பிற்போட அரசாங்கம் முயற்சிப்பதாக முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண குற்றம் சுமத்தியுள்ளார்.

டலஸ் அழகப்பெரும தலைமையிலான அண்மையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாயின் அதற்கு முன் 13 திருத்த சட்டம் மூலமாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் முறை ஒழிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாகத் தெரிவித்து தேர்தல்களைப் பிற்போடும் திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுக்க உத்தேசிக்குமாயின் நாட்டில் பாரிய கிளர்ச்சியொன்று ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

# தனியார்துறை ஊழியர்களுக்கான அடிப்படை சம்பளத்தில் மாற்றம்

(கொழும்பு)

தனியார் துறை ஊழியர்களுக்கான குறைந்தபட்ச சம்பளத்தை உயர்த்த தொழில் அமைச்சினால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி அடிப்படை சம்பளத்தை 21,000 ரூபாவாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்திற்கான துறைசார் மேற்பார்வைக் குழு கூடிய போது, தனியார்துறை ஊழியர்களின் சம்ப ளத்தை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தனியார் துறை ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை தலைதூக்கியுள்ளதாக குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜகத் குமார சுமித்திராராச்சி தெரிவித்தார்.

தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை 12,500 ரூபாவிலிருந்து 21,000 ரூபாவாக அதிகரிக்க தொழில் அமைச்சு யோசனை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தம்

## அரசாங்க மருத்துவர்கள் சங்கம் அறிக்கை

(கொழும்பு)

அரசாங்க மருத்துவர்கள் சங்கம் நேற்று மேற்கொள்ளவிருந்த தமது தொழிற்சங்கப் போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

மருத்துவர்களுக்கு மேலதிகமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 35,000 கொடுப்பனவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டதை எதிர்த்து சிறப்பு மருத்துவர்கள் உள்ளிட்ட அரசு மருத்துவர்கள் காலவரையறையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை காலை 8 மணி முதல் முன்னெடுக்க தீர்மானித்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வேலை நிறுத்த போராட்டத்தை இடை நிறுத்தியுள்ளதாக அரசாங்க மருத்துவர்கள் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது. (நி-5-6)

# அநுரகுமாரவை சந்தித்தார் இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிற்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் இடம் பெற்றது.

இச் சந்திப்பு நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரின் அலுவலகத்தில் இடம் பெற்றது.

புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, கடந்த டிசெம்பர் மாதத்தில் இலங்கையில் தனது கடமைகளை ஆரம்பித்த பின்னர் முதற்தடவையாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (நி-5-6)

# 60 வகையான மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு

(கொழும்பு)

இலங்கையின் மருத்துவக் கட்டமைப்பில் 60 வகையான மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. பற்றாக்குறையாகவுள்ள சகல வகை யான மருந்துகளும் தற்போது முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக மருந்து விநியோகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அந்த மருந்துகள் சில வாரங்களுக்குள் கட்டம் கட்டமாக நாட்டிற்கு கொண்டுவரப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து தற்போது அதிகளவு மருந்துகள் கொள்வனவு செய்யப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)

# மின்கட்டண திருத்தம் பெப்ரவரி நடுப்பகுதியில்

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான மின்சார கட்டண திருத்தம் எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் மேற்கொள்ளப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பொது பயன்பாட்டு ஆணைக்குழுவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 16



தென்கச்சி கோசுவாமிநாதன்

## சட்டமும் தண்டனையும்

ஒருத்தர் இருந்தார்!

எதுக்கு எடுத்தாலும் சட்டம் பேசுவார். 'சட்ட நுணுக்கமெல்லாம் என் விரல் நுனியிலே வச்சிருக்கிறேன் என்பார்!

அவரு எப்படி சொல்வார் என்றா...

'லா பொயின்ட் எல்லாம் என் ஃபிங்கர் டிப்லே வச்சிருக்கேன்' என்பார்!

சரி அவர் விரல் நுனியில் என்னதான் வச்சிருக்கார் என்று பார்த்தேன்.. நகம்தான் வச்சிருந்தார்... நீள நீளமா! வேறே எதுவும் என் கண்ணுக்குத் தெரியலை!

ஒரு வேளை அந்த கூரான நகத்தைத்தான் 'சட்ட பொயின்ட் என்று சொன்னாரோ என்னவோ!

அவரு எப்படியாவது இருந்துட்டுப் போகட்டும்! ஆனா நாமெல்லாம் தெரிஞ்சிக்க வேண்டிய ஒரு உண்மை என்ன தெரியுமா?

சட்டம் எனக்குத் தெரியாது என்று சொன்னா அதை சட்டமே ஏத்துக்கொள்றதில்லையே!

விளக்கு இல்லாம சைக்கிள்ல போறோம்! பொலிஸ்ல நம்மை பிடிச்சு கொண்டு போயி கோர்ட்ல நிறுத்திடுறாங்க!

அங்கே நாம்.. "இல்லாம சைக்கிள்ல போறது தப்பென்று எனக்குத் தெரியாது" என்று சொன்னா அதை அங்கே ஏத்துக்க மாட்டாங்க!

அதனாலே - சட்டம்

எனக்குத் தெரியாதென்று சாதாரண மனிதன் கூட சொல்ல முடியாது! அதை சட்டம் ஏத்துக்காது! சட்டத்தை தெரிஞ்சிக்க வேண்டியது நம்மளோட கடமை!

அதை மாதிரிதான்...

ஒரு குற்றத்துக்கு உடந்தையா இருந்திட்டு... அந்த குற்றத்தை நான் நேரடியா செய்யல... அதனாலே என்ன விட்டுவிடுங்கோ என்று சொன்னா கேக்கமாட்டாங்க!

சட்டத்தின் கீழ்...

குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை உண்டு! குற்றம் செய்யிறதுக்கு உடந்தையா இருந்தவர்களுக்கும் தண்டனை உண்டு!

குற்றத்துக்கு உடந்தையா இருக்கிற என்றா என்ன? சட்டம் என்ன சொல்லுது தெரியுமா?

"ஒரு நபரை குற்றம் புரியுமாறு தூண்டுதல், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுடன் கூடி சதி செய்து அந்த சதியின் விளைவாக ஒரு சட்ட விரோதமான காரியத்தைச் செய்வது, அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருப்பது.

வேண்டுமென்றே ஒரு குற்றச் செயல் புரிவதற்கு அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருப்பதற்கு உதவி செய்வது - ஆகியவற்றைக் குற்றத்குக்கு உடந்தையாக இருத்தல்' என்று சட்டம் சொல்லுகிறது. புரிஞ்சிக்கிட்டீங்களா?

இன்னொரு விவரத்தையும் தெரிஞ்சுகொள்ளுங்கோ "ஒரு குற்றத்துக்கு உடந்தையாக இருந்து வேறொரு குற்றம் புரியப்பட்டால் அந்தக் குற்றத்துக்கு உடந்தையாக இருந்தவருக்கு செய்யப்பட்ட குற்றத்திற்குப் பொறுப்பு சார்வதுடன் தாமே அந்தக் குற்றம் புரிவதற்கு நேரடி உடந்தையாக இருந்ததாகவும் கொள்ளப்படும்."

அதனாலே முக்கியமாக புரிஞ்சிக்க வேண்டியது என்ன வென்றால்...விசத்தை நேரடியா ஒருத்தருக்கு கொடுத்தாலும் ஒன்றுதான் இன்னொருத்தர் கிட்ட கொடுத்து கொடுக்கச் சொன்னாலும் ஒன்றுதான். தண்டனையை அனுபவிச்சே தீரணும்.

தண்டனையிலேயிருந்து தப்பிக்கிறதுக்கு என்னென்னமோ சாமர்த்தியமா வாதாடிப் பார்க்கலாம்! இருந்தாலும் சட்டம் அதை ஒத்துக்கொள்ளாது!

ஒருத்தன் இப்படித்தான் ஒரு தப்பு செய்துபோட்டான் தப்பென்னா சாதாரண தப்பு அல்ல! பெரிய குற்றம்! கொலைக் குற்றம்! அதாவது ஒரு பையன் அவங்க அப்பாவையும் அம்மாவையும் கொன்றுபோட்டான்!

கோட்டில அவனுக்கு மரண தண்டனை நிச்சயமாகிவிட்டுது.!

கடைசியா நீதிபதி அவனை பார்த்து "நீ கடைசியா உன் தரப்பிலே ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லிக்கலாம்" என்றார்.

அந்த பையன் சொன்னான்.

"ஐயா! நீதிபதி அவர்களே! எங்க அப்பாவையும் அம்மாவையும் நான் தான் கொன்றேன்! அதை ஒத்துக்கொள்கிறேன். அப்ப ஏதோ ஒரு ஆத்திரத்திலே அப்படி பண்ணிப்போட்டேன்! ஆனா இப்ப.. அப்பா அம்மா மேலே அளவு கடந்த பாசம் எனக்கு உண்டாயிற்றுது... அது மட்டுமில்லை இப்ப நான் தாய் தந்தை இல்லாத அனாதை! இப்பவெல்லாம் எந்த நேரமும் அவங்க நினைப்பாவே இருக்கிறேன். அதனாலே இந்த பாயின்ட்டை பரிசீலனை பண்ணி என்னை விடுதலை செய்யனும்." அப்படியென்றான்.எல்லாத்தையும் நீதிபதி பொறுமையா கேட்டு கொண்டார். கடைசியா இப்படி தீர்ப்பு சொன்னார். எப்படி தெரியுமா?

"இந்த பையன் குற்றத்தை ஒத்துக்கொண்டான். அதே நேரத்தில இப்ப, தன்னோட தாய் தந்தை மேலே அளவு கடந்த பாசம் வச்சிருக்கான். அதை தவிர தான் அனாதையாயிருக்கிறோம் என்கிற நினைப்பு வேற இருக்கு.. இதையெல்லாம் கருணையோட பரிசீலனை செய்து பார்த்ததிலே அவனை அவங்க அப்பா அம்மா இருக்கிற இடத்துக்கே அனுப்பி வைச்சிடுறதுதான் நல்லது. அதனாலே மரண தண்டனை வழங்கிறேன்" என்றார்.பையனும் அவங்க அப்பா அம்மாகிட்ட போய் சேர்ந்தான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற உத்தரவுக்கமைய 300 கிலோ கஞ்சா எரிப்பு



(குருமன்காடு)

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மேற்பார்வையின் கீழ் நேற்று 300 கிலோவிற்கு மேற்பட்ட கஞ்சா எரிக்கப்பட்டது.

கடந்த வருடம் வவுனியா மேல் நீதிமன்றத்தில் முடிவுறுத்தப்பட்ட 12 வழக்குகளில் முன்வைக்கப்பட்ட 300 கிலோவிற்கு மேற்பட்ட கஞ்சா வவுனியா ஏ9 வீதி, சாந்தசோலை பகுதியில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியின் மேற்பார்வையின் கீழ் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், நீதிமன்ற பொலிஸாரின் ஒத்துழைப்புடன் எரிக்கப்பட்டது.

சுகாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு மக்கள் நடமாட்டம் மற்றும் அருகே வீடுகள் அற்ற பகுதியில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கஞ்சா எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-6-250)

# மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விலை நிர்ணய குழுக்கூட்டம்


(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்ட ஒப்பந்த வேலைகளுக்கான விலை நிர்ணயக் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தொழிலாளர் கூலி, வாகன வாடகை, கட்டட மூலப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மேலும் இக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட விலையின் அடிப்படையிலே அரச ஒப்பந்த வேலைகளை செய்து கொள்ள முடியும். இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி), பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பொறியியலாளர், நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர், திணைக்களங்களின் தலை வர்கள், திணைக்களங்களின் பொறியியலாளர்கள், பச்சிலைப் பள்ளி உதவிப் பிரதேச செயலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.(நி-5-6-100-316)

# சட்டவிரோத மணல் அகழ்வு; கிளிநொச்சியில் கலந்துரையாடல்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் விசேட கலந்துரையாடல் நேற்று புதன் கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக கடந்த கூட்டங்களில் பொலிஸ், இராணுவம், கடற்படை பிரிவுகளுக்கு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரால் வலியுறுத்தப்பட்டு கட்டுப்பாட்டுக்குள இருந்தது. ஆனால் தற்போது குறித்த நடவடிக்கைகளில் தளர்வு நிலை காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்துவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியமானது என தெரிவித்தார்.

இதன்போது, மாவட்டத்தில் சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அரச அதிபர் மேலும், கிளிநொச்சி குளத்தின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் குறிப்பாக பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி), திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரின் இணைப்பாளர், கண்டாவளை பிரதேச செயலாளர், உதவி மாவட்ட செயலாளர், பச்சிலைப்பள்ளி உதவி பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர், துறைசார் திணைக்கள தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள், இரணைமடு கமக்காரர் அமைப்பின் செயலாளர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.(நி-5-6-100-315-316-350)

# மேழிவனம் தாழ் பாலத்தினை மேம்பாலமாக புனர்நிர்மாணம் செய்யுங்கள்

## மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மேழிவனம் கிராமத்தின் தாழ் பாலத்தினை மேம்பாலமாக புனர்நிர்மாணம் செய்து தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மணவாளன் பட்ட முறிப்பு கிராம அலுவலர் பிரிவில் மேழிவனம் கிராமம் காணப்படுகின்றது.

இக்கிராமத்தில் 30 குடும்பங்கள் வாழ்கின்றன. மழைக் காலத்தில் ஆமையன் ஆறு வழியாக பெருமளவு வெள்ளம் இக்கிராம தாழ் பாலத்தினை மூடிப் பாய்வதன் காரணமாக கிராம மக்கள் மாங்குளம் ஒட்டு சுட்டான் வீதிக்கு போக்குவரத்து செய்வதில் சிரமத்தினை எதிர் கொள்கின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து குறித்த தாழ் பாலத்தினை மேம்பாலமாக மாற்றுவதற்கு ஆவணம் செய்ய வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

# நெல் வயல்களுக்குள் யானைகள் அட்டகாசம்



(கண்டாவளை)

கிளிநொச்சி, வன்னேரிக் குளம், ஆனைவிழுந்தான், ஜெயபுரம் மற்றும் தேவன்கட்டு ஆகிய பகுதிகளில் சுமார் 80 ஏக்கருக்கும் மேற்பட்ட அறுவடைக்கு தயாரான நெல் வயல்களை காட்டு யானைகள் அழித்துள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

குறித்த பகுதிகளில் நாளாந்தம் இரவு வேளைகளில் காவல் இருந்து பயிர்கள்ள பாதுகாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக தங்களுடைய வயல் நிலங்கள் யானைகளால் அழிக்கப்பட்டு வருவதாகவும் ஓரிரு நாட்களில் அறுவடை செய்ய செய்ய வேண்டிய நிலையில் காணப்பட்ட நெற் பயிர்களை நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள் அழித்துள்ளது என கவலையடைந்துள்ளனர். (நி-5-6-[illegible])

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளைச் சங்கத்திற்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கின்ற பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், தொழிலதிபர்கள், சாரணிய செயற்பாடுகளில் ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தங்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை அல்லது (www.jaffnascoutassociation.com) எனும் இணையத்தில் தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து 01.02.2024 இற்கு முன்னர் செ.தேவரஞ்சன் செயலாளர் புதிய வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி [illegible]




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 750 | 600 | 700 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1000 | 1000 |
| தக்காளி | 650 | 700 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 120 | 150 | 150 |
| கோவா | 700 | 650 | 600 | 800 |
| கரட் | 850 | 1200 | 1000 | 1800 |
| பூசணி | 150 | 140 | 150 | 200 |
| புடோல் | 280 | 250 | 300 | 300 |
| வாழைக்காய் | 250 | 260 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 380 | 480 | 400 | 450 |
| பாகற்காய் | 800 | 700 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 600 | 600 | 350 | 600 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 900 | 700 | 800 | 600 |
| லீக்ஸ் | 450 | 450 | 600 | 800 |
| பீற்றூட் | 800 | 600 | 800 | 800 |
| கறிமிளகாய் | 800 | 600 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | --- | --- | --- | --- |
| போஞ்சி | 600 | 600 | 600 | 700 |
| கத்தரிதம்புள்ள | 700 | 500 | 700 | 600 |
| கீரை - 1 பிடி | 160 | 160 | 120 | 150 |
| தேசிக்காய் | 200 | 300 | 350 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 450 | 600 |
| வெங்காயப்பூ | 600 | 350 | 500 | 600 |
| முள்ளங்கி | 180 | 150 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 140 | 60 |
| வல்லாரை | 80 | 50 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 387



"இளவரசே! இன்னொரு காரணம்?"

"பார்த்திபப் பல்லவர் திரிகோண மலையில் வந்து இறங்கினவுடனே, எனக்குச் செய்தி கிடைத்தது. அவரை இன்று பார்க்க விரும்பவில்லை. ஏனெனில்"

"ஏனெனில்?"

"மாதோட்டத்துக்கு முதன் மந்திரி வந்திருக்கிறார் என்பதும் எனக்குத் தெரியும். அவரிடமிருந்து செய்தி வரும் என்று எதிர்பார்த்தேன். இரண்டு மூத்தவர்களிடமிருந்து செய்தி வந்தால், முதலில் கிடைக்கிற செய்தியின் படிதானே நான் நடந்தாக வேண்டும்?"

வந்தியத்தேவன், "ஆகா! அப்படிச் சொல்லுங்கள், என் கட்சி தானே ஜெயித்தது?" என்று குதூகலித்தான்.

"அரசே! இவன் தங்களைத் தந்திரத்தினால் ஏமாற்றி விட்டான்"

"அவன் ஏமாற்றவில்லை நானாகவே ஏமாந்தேன். உன்னை அழைத்து வருவதற்கு வைத்திருந்த வீரனை இவன் குதிரை மேலிருந்து தள்ளிவிட்டு அக்குதிரை மீது தான் ஏறிக்கொண்டு வந்ததை நான் கவனித்துவிட்டேன். இவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்பினேன்."

"நல்ல பாடம் கற்பித்தீர்கள்! ஒவ்வொரு பாடமும் ஒரு மணங்கு நிறையிருக்கும். இப்போது நினைத்தாலும் என் முதுகும் மார்பும் வலிக்கின்றன! ஓலை கொண்டு வந்த தூதனை இப்படித்தானா நடத்துவது? போனால் போகட்டும் தாங்கள் மட்டும் என்னுடன் பழையாறைக்கு வருவதாயிருந்தால்."

"எனக்கு ஒரு பழைய பாடல் ஞாபகம் வருகிறது! திருமலை! என் முன்னோர்களில் பெருங்கிள்ளி வளவன் என்று ஒரு மன்னர் இருந்தார். அவரிடம் ஓர் அதிசயமான யானை இருந்தது. அதன் ஒரு கால் காஞ்சியில் இருக்கும் இன்னொரு காலினால் தஞ்சையை மிதிக்கும் மற்றொரு கால் இந்த ஈழ நாட்டை மிதிக்கும் நாலாவது கால் உறையூரில் ஊன்றி நிலைத்திருக்கும்.

"கச்சி ஒரு கால் மிதியா ஒரு காலால் தத்து நீர்த் தண் தஞ்சை தான்மிதியாப்-பிற்றையும்

ஈழம் ஒரு கால் மிதியா வருமே நம்

கோழியர் கோக் கிள்ளி களிறு!"

என்று அற்புதமான கற்பனையுடன் ஒரு புலவர் பாடியிருக்கிறார். இந்த இலங்கையில் மந்தை மந்தையாக ஆயிரம் ஆயிரம் யானைகள் இருக்கின்றன. இருந்து என்ன பயன்? புலவருடைய கற்பனை யானையைப்போல் ஒரு யானை இருந்தால் நானும் ஒரே சமயத்தில் காஞ்சியிலும், பழையாறையிலும், மதுரையிலும், இலங்கையிலும் இருக்கலாம் அல்லவா?"

புலவரின் யானையைப் பற்றிக் கேட்டதும் வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். "அப்படிப்பட்ட யானைதான் இல்லையே? தாங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று திருமலை கேட்டான்.

"சந்தேகம் என்ன? பழையாறைக்கு வருவதென்று தான் முடிவாகி விட்டதே?" என்றான் வந்தியத்தேவன்.

"உங்கள் சண்டையைக் கொஞ்சம் நிறுத்தி வையுங்கள். நாளை அநுராதபுரம் போவோம். அங்கே பார்த்திப பல்லவரை நான் எப்படியும் சந்தித்தாக வேண்டும். அவர் சொல்வதையும் கேட்டுவிட்டுத்தான் முடிவு செய்ய வேண்டும்" என்றார் இளவரசர்.

## முப்பத்து மூன்றாம் அத்தியாயம்

### சிலை சொன்ன செய்தி

மறுநாள் காலையில் சூரியன் உதயமாவதற்குள் அருள்மொழிவர்மர், ஆழ்வார்க்கடியான், வந்தியத்தேவன் ஆகிய மூவரும் அநுராதபுரத்துக்குப் புறப்பட்டார்கள். சிறிது தூரம் காட்டுப் பாதையில் வந்த பிறகு இராஜபாட்டையை அடைந்தார்கள். வேறு வீரர்கள் யாரையும் இளவரசர் தம்முடன் மெய்க்காவலுக்கு அழைத்து வராதது வந்தியத்தேவனுக்கு வியப்பை அளித்தது. ஆனால் அன்றைய பிரயாணத்தில் அவனுக்கிருந்த உற்சாகத்தைப் போல் அதற்குமுன் என்றுமிருந்ததில்லை.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தளபதியின் சமரசம்

மன்னர் முல்லாவுக்கு ஒரு வீட்டுப் பகுதியை அன்பளிப்பாகக் கொடுத்தார்.

அந்த வீட்டுக்கு மாடி உண்டு. அந்த மாடிப்பகுதியை மன்னர் ஒரு படைத்தளபதிக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார்.

மாடியில் இருக்கும் படைத் தளபதியின் மனைவி அடிக்கடி கல் உரலில் மாவு இடிப்பாள். அந்தச் சமயத்தில் கீழ் வீட்டில் இருக்கும் முல்லாவுக்கு பெரிய தொந்தரவாக இருக்கும். மாவு இடிக்கும் போது வீடே அதிரும். இடியோசை மாதிரி சப்தமும் கேட்கும்.



முல்லா இரண்டு மூன்று தடவை படைத் தளபதியைச் சந்தித்து கொஞ்சம் மெதுவாக மாவு இடிக்குமாறு அவர் மனைவிக்குச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டார். படைத்தளபதிக்கோ கோபம் வந்து விட்டது.

"இது மன்னர் எனக்காக அளித்த வீடு. ஆகவே இது எனக்குச் சொந்தமானது. என் வீட்டில் என் மனைவி எப்படி வேண்டுமானாலும் மாவு இடிப்பாள். அதைக் கேட்பதற்கு நீ யார்?" என்று முல்லாவை அதட்டி அனுப்பி விட்டார்.

மறுநாள் முல்லா கீழே உள்ள தன் வீட்டுப் பகுதியில் கடப்பாறையைக் கொண்டு இடித்துக் கொண்டிருந்தார்.

"கீழே என்ன செய்கிறாய்?" என்று படைத் தளபதி மாடியில் இருந்து அதட்டினார்.

"கீழ்ப்பக்கம் இருக்கும் என் வீட்டை முற்றிலுமாக இடித்துத் தள்ளிவிட்டுப் புதிதாக கட்டத் தீர்மானித்திருக்கிறேன்" என்றார் முல்லா.

அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த படைத் தளபதி "என்னைய்யா முட்டாளாக இருக்கிறீரே, கீழ்வீடு முழுவதையும் இடித்தால் மேல் வீடு என்ன ஆகும் என்று யோசித்தீரா?" என்று கோபத்தோடு கேட்டார்.

"மேல் வீட்டைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும். எனக்குச் சொந்தமான வீட்டை நான் இடிக்கிறேன். இதில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை" என்று கூறி விட்டு முல்லா சுவரை இடிக்கத் தொடங்கினார்.

பதறிப்போன படைத் தளபதி முல்லாவிடம் சமரசம் பேச முற்பட்டார்.

"நாம் இருவரும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளாமல் ஒருவரை யொருவர் அனுசரித்துச் செல்வது தான் நல்லது. நாம் இருவரும் நண்பர்களாக இருப்போம்" என் றார் தளபதி.

"நான் எப்போதுமே யாருக்கும் நண்பன் தான்" என்று கூறிவிட்டு முல்லா சிரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான, அமைதியான மனமே எதிர்பாராத சூழ்நிலைகளிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும். – ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியாவைச் சிக்கன பிடிப்பதுதான் ஒரே வழி

திருவாசகம் என்னும் தேனைத் தந்த மணிவாசகர் சிவப்பரம்பொருளைச் சிக்கனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவதும் மினியே என்கின்றார்.

ஆக கடவுளை, பெரியவர்களைச் சிக்கனப் பிடித்தல் வேண்டும். அப்போதுதான் மீட்சி கிடைக்கும் என்பதை மணிவாசகர் நமக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆம், அண்மையில் இலங்கைக்கான இந்தியத் தூதுவரைத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அச்சந்திப்பின்போது, இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா எடுத்துக்கூற முடியுமே யன்றி, கட்டாயப்படுத்த முடியாது எனத் தூதுவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் புதியவர். அவரைப் பொறுத்தவரை வார்த்தைகளை மிகவும் நிதானமாகக் கூறவேண்டும் என்பதிலே அவர் கவனமாக இருப்பார்.

ஆகையால் அவர் கூறியது அவரைப் பொறுத்தவரை சரியானதே.

அதேநேரம் இந்தியத் தூதுவர் கூறியது முடிந்த முடிவு என்றில்லை என்பதையும் நாம் உணர்ந்தாக வேண்டும்.

இதற்குக் கடந்த கால வரலாறுகள் சான்றாக அமையும். இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்தமையும் இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதும் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்ற உடன்பாடுகளும் இன்னமும் உயிர்ப்போடுதான் உள்ளன.

எனவே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரு தரப்பில் ஒரு தரப்பு ஒப்பந்தத்தை அமுலாக்க வேண்டும்.

அதன்மறுதரப்பு ஒப்பந்தம் அமுலாகுவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்த அடிப்படையில் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்துவதை இந்தியா உறுதி செய்வது கட்டாயமாகிறது.

எனவே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறலாமேயன்றி, அதனைக் கட்டாயப்படுத்த முடியாதென்ற கருத்து வலிமை குறைந்த வார்த்தையாயினும் அஃது இந்தியத் தூதுவரின் தொடக்க உரை என்பதால், அதுபற்றி நாம் அதிகம் சிந்திக்க வேண்டியதில்லை.

மாறாக நாம் இங்கு கவனிக்க வேண்டிய விடயம் வெளிநாட்டு அழுத்தங்களும் அதட்டல்களும் இல்லாமல் இலங்கை அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வைத் தரமாட்டாது என்பதுதான்.

ஆக, இலங்கை ஆட்சியாளர்களை அதட்டக்கூடிய ஒரு பலமான சக்தி இருந்தால் மட்டுமே இனப் பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாகும்.

இங்குதான் எங்களிடம் இருந்த பலமான சக்தி இப்போது இல்லை என்றாயிற்று. இந் நிலையில் எமக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய சர்வதேச சக்தி எது எனில், அது இந்தியாவாகவே இருக்க முடியும்.

ஆம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மிகப்பலம் வாய்ந்த தலைவர். அவரிடம் இருக்கக்கூடிய ஆத்மபலத்தை இந்தியாவின் புதிய பாராளுமன்ற கட்டம் திறந்து வைத்தலிலும் அயோத்தி இராமர் ஆலய மகா கும்பாபிஷேகத்தின் போதும் கண்டு கொண்டோம்.

எனவே சிவபூமியான எங்கள் ஈழத்திரு நாட்டில் தமிழ் மக்கள் உரிமையோடு வாழ்வதாக இருந்தால், நாம் செய்ய வேண்டியது இந்தியாவை – பிரதமர் நரேந்திர மோடியை சிக்கனப் பிடிப்பதுதான்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றும் முயற்சியில் அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி கர்தினால் மல்கம் ரஞ்சித் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பல விதிகள் அரசியல் சாசனத்துடன் ஒத்துப் போவதில் லை என்று கூறி உத்தரவைப் பிறப்பிக்குமாறு உயர் நீதிமன்றத்தை கர்தினால் தனது மனுவில் கோரியுள்ளார்.

முன் மொழியப்பட்ட சட்டமூலம் தற்போதைய வடிவில் நிறைவேற்றப்பட்டால், நியாயமான சந்தேகம் இன்றி தேவையற்ற கைதுகளை மேற்கொள்ள முப்படை, பொலிஸ் மற்றும் கடலோரப் பொலிஸாருக்கு வரம் பற்ற அதிகாரம் வழங்கப்படும்.

இது அரசியல் சாசனம் அளித்துள்ள கருத்து சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் என கர்தினால், தனது மனுவில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, ஜனவரி 10 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட யோசனையை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்ற வாக்கெடுப்பு மற்றும் சர்வஜன வாக்கெடுப்புக்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு கர்தினால் உயர்நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

முன்னதாக, கடந்த வாரம், நிறுவனங்களுக்கு இடையிலான ஊழியர் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிராக, சில விதிகள் அரசியலமைப்புக்கு முரணானது எனக் கூறி உயர்நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

ஏற்கனவே 2023 செப்டம்பர் 5 அன்று, அரச வர்த்தமானியில் பல்வேறு தரப்பினரால் பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் கருத்துகளுக்கு இணங்க திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு யோசனையை வெளியிடவும், யோசனையை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

எவ்வாறாயினும், இந்தச் சட்டமூலம் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் உள்ளிட்ட உரிமை அமைப்புகள் உத்தேச சட்டத்தை திருத்தியமைத்து சர்வதேச மனித உரிமைக் கடமைகளுக்கு இணங்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன. (ம-7)

# புதிதாக 5,500 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள தீர்மானம்

## வெளியானது வர்த்தமானி

தெரிவு செய்யப்பட்ட சில பாடங்களுக்கு 5,500 புதிய ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

வேதியியல், இயற்பியல், உயிரியல், கணிதம், தொழில்நுட்பம் மற்றும் விசேட மொழிகளுக்கு இந்த ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட உள்ளன.

இதேவேளை 22 ஆயிரம் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை 9 மாதங்களாக விசாரணைக்கு உட்படுத்தி நிறைவடைந்துள்ள நிலையில், அடுத்த வாரம் தீர்ப்பு வழங்கப்படும் என நம்புவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆனால், அந்த நபர்கள் தற்போது பாடசாலைகளில் இருப்பதால், 40,000 ஆசிரியர் வெற்றிடங்களில் இருந்து அவர்களை நீக்க வேண்டும் என தெரிவித்தார்.

மேலும், அனைத்து மாகாண சபைகளும் 13,500 ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கான பணிகளை மேற்கொண்டுள்ள போதும், இது தொடர்பில் நிலவும் நீதிமன்ற செயற்பாடுகள் காரணமாக அது தாமதமாகியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், விரைவில் அது தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கக்கூடும் என தெரிவித்தார். (ம-7)

# 7 மீனவர்களுக்கு மரண தண்டனை

## மேல் நீதிமன்றம் உத்தரவு

மீன்பிடிக் கப்பலை கடத்தி மூன்று மீனவர்களை கொலை செய்த வழக்கில் 7 மீனவர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு ஒக்டோபர் 15ஆம் திகதி இலங்கைக் கடற்பகுதியில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட வர்களை ஏற்றிச் சென்ற 'தேஜான்' என்ற மீன்பிடிக் கப்பல் கடத்தப்பட்டு மூன்று மீனவர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் பல மீனவர்கள் படுகாயமடைந்தனர்.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு உயர் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்ட போது நீதிபதி ஆதித்ய பட்டபாண்டிகே 7 மீனவர்களுக்கு உரிய உத்தரவை பிறப்பித்துள்ளார்.

வழக்கின் 10வது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருந்த பிரதிவாதியை அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்குமாறும் உயர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கு மேலதிகமாக, ஏனைய ஆறு குற்றச்சாட்டுகளுக்கும் பிரதிவாதிகளுக்கு 29 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்த நீதிபதி, தலா 2,008,500 ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

மரண தண்டனைக்கு மேலதிகமாக விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைகளையும் ஒரே நேரத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். 11 பிரதிவாதிகளுக்கு எதிராகச் சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

மூன்று பிரதிவாதிகள் வழக்கு விசாரணை இடம்பெற்றிருந்த காலப்பகுதியில் இறந்துவிட்டதால், 8 பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் நடத்தப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பிரதி பொலிஸ் மா அதிபராக நிஹால் தல்துவ நியமனம்

(கொழும்பு)

பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ பிரதி பொலிஸ்மா அதிபராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் அவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவியை வகித்துக் கொண்டு பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும் செயற்பட்டிருந்தார்.

இந்நிலையில் நடைமுறைக்கு வரும் வகையில் அவர் பிரதிப் பொலிஸ் மா அதிபராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி நிஹால் தல்துவ, பொலிஸ் குற்றவிசாரணைப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கான கடிதம் ஒன்றை பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் வழங்கியுள்ளார். அதேநேரம் நிஹால் தல்துவ தொடர்ந்தும் பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும் கடமையாற்றுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## முதலிரு மேற்கத்தைய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

07

இதற்கான இழப்பீட்டைபெறும் நோக்குடன் போர்த்துக்கேயப் படை மாட்டின் அல்போன் சோத சூசா என்பவன் தலைமையில் கி.பி 1543 ஆம் ஆண்டு படையெடுத்து வந்தது. சூழ்நிலை பாதகமாக இருப்பதை உணர்ந்த சங்கிலி போர்த்துக்கேயருடன் போர் புரிய விரும்பாது உடன்படிக்கையை மேற்கொண்டு அவர்களுக்கு இழப்பீட்டை வழங்கி அவர்களை திருப்பியனுப்பினான். இது அவர்களது தலையீடு இராச்சியத்தில் ஏற்படுவதை விரும்பாமலே இவ்வாறு நடந்து கொண்டிருப்பான் என எண்ணத் தோன்றுகின்றது.

இந் நிகழ்வின் பின்பும் சங்கிலி மன்னனது போர்த்துக்கேயருக்கு எதிரான செயற்பாடானது தொடர்ந்த வண்ணமே இருந்தது. அதற்கு ஓர் எடுத்துக் காட்டாக மன்னாரில் இடம் பெற்ற நிகழ்வை குறிப்பிட முடியும். அதாவது யாழ்ப்பாண இராச்சியத்தின் ஓர் பகுதியான மன்னாரில் கத்தோலிக்க மத குருவான வண. பிரான்சிஸ் சேவியர் தலைமையில் மதமாற்ற நடவடிக்கைகள் இடம் பெற்று வந்தன. இதனை அறிந்து கொண்ட சங்கிலி மன்னன் கி.பி 1544 ஆம் ஆண்டு மதம் மாறியவர்களை மீண்டும் சைவசமயத்திற்கு மாறும் படி கட்டளை பிறப்பித்தான்.

இவனது கட்டளையை ஏற்க மறுத்த பலரை இவனது படையினர் தமது வாளுக்கு இரையாக்கி வந்தனர். இவ்வாறு இவனது படையினரால் 600 பேர் கொல்லப்பட்டதுடன் பிரான்சிஸ் சேவியரின் சீடனும் சங்கிலி மன்னனின் பிரதிநிதியாக இருந்த இளம் சிங்கம் என்பவனும் இதன் போது கொல்லப்பட்டான்.

தீவிர இந்து மதப்பற்றாளனான சங்கிலியன் இவ்வாறு நடந்து கொண்டதற்குக் காரணம் இதன் மூலம் போர்த்துக்கேயரது செல்வாக்கு தனது இராச்சியத்தில் நிலைத்துவிடும் என கருதியமையே ஆகும். ஆனால் இவனது இச்செயற்பாடு போர்த்துக்கேயருக்கு கடும் கோபத்தை தோற்றுவித்திருந்ததனால் அவனை தண்டிக்கும் நோக்குடன் மீண்டும் படையெடுப்பை மேற்கொண்டனர்.

போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையுடன் தொடர்ந்து செயற்பட்டு வந்த சங்கிலி போர்த்துக்கேயருக்கு எதிராக அக் காலப் பகுதியில் செயற்பட்டு வந்த தென்னிலங்கை சிங்கள ஆட்சியாளர்களுடன் நட்புறவு கொண்டிருந்ததைக் காணமுடிகின்றது. அவ்வகையில் போர்த்துக்கேயருக்கு எதிராகபோராடி வந்த சீதாவக்கை மன்னன் மாயாதுன்னையுடன் இவன் நட்புறவை பேணி வந்தான். மாயாதுன்னை போர்த்துக்கேயருக்கு எதிராக போரிடுவதற்கு தென்னிந்தியாவிலிருந்து படைகளை வரவழைத்தபோது அப்படைகள் யாழ்ப்பாணத்தினூடாகச் செல்வதற்கு உதவியளித்து வந்தான். அத்துடன் கோட்டை மன்னன் புவனேகபாகுவிற்கு எதிராக மாயாதுன்னை கி.பி 1545 ஆம் ஆண்டு படையெடுத்தபோது அப்படையெடுப்பிற்கு தனது உதவியையும் வழங்கியிருந்தான்.

மற்றோர் நிகழ்வாக தர்மபாலன் கோட்டை அரசின் ஆட்சிப்பீடமேறி போர்த்துக்கேயர்க்கு ஆதரவாக செயற்பட்டு வந்த போது அவனது தந்தை விதிய பண்டாரன் அவனுக்கு எதிராக செயற்பட்டதுடன் போர்த்துக்கேயருக்கு எதிராகவும் செயற்பட்டு வந்தான். இதனால் போர்த்துக்கேயர் தன்னை கொலை செய்யலாம் என அஞ்சி புத்ததந்த தாதுவுடன் சங்கிலியிடம் தஞ்சமடைந்திருந்ததுடன் போர்த்துக்கேயருக்கு எதிராக சங்கிலியுடன் இணைந்து செயற்பட்டு வந்தான். இவ்வாறு போர்த்துக்கேயருக்கு எதிராக போரிடுவதற்கு வெடி குண்டு தயார் செய்த போது வெடி விபத்து ஒன்றிலேயே விதிய பண்டாரன் யாழ்ப்பாணத்தில் மரணமானான். இச்சம்பவம் காரணமாகவே நல்லூர் பகுதியில் பூதவராயர் ஆலயம் அமைக்கப்பட்டதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு போர்த்துக்கேயருக்கு எதிராக சங்கிலி தொடர்ந்து செயற்பட்டு வந்ததன் காரணத்தால் போர்த்துக்கேயரும் சங்கிலிக் கெதிராகச் செயற்படும் வகையில் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றும் நோக்குடன் படையெடுப்பை மேற்கொள்ளத் தொடங்கினர்.

### சங்கிலிக்கெதிரான போர்த்துக் கேயரது படையெடுப்பு

சங்கிலிக் கெதிரான போர்த்துக்கேயரது படையெடுப்பு கி.பி 1560 ஆம் ஆண்டு கொன்ஸ்தாந்தினோ பிரகன்ஸா என்ற தளபதியின் தலைமையில் இடம்பெற்றது. இப்படையெடுப்பால் தோல்வியடைந்த சங்கிலி மன்னன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டு போரை முடிவுக்குக் கொண்டு வந்தான். எனினும் படையெடுத்து வந்த போர்த்துக்கேயப்படை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல அழிவுகளை மேற்கொண்டு வந்தது.

சங்கிலி மன்னனோ கையறு நிலையில் [illegible] அதனை தடுக்க [illegible]. போர்த்துக்கேயரோ தமிழ் மக்களது வீடுகள், ஆலயங்கள் ஆகியவற்றுள் நுழைந்து அங்கிருந்த செல்வங்களை சூறையாடி வந்தனர். இந்துக்கள் புனிதமாக போற்றும் பசுக்களை கொன்று உணவாக்கி வந்தனர்.

இந்துக்கள் கிறிஸ்தவத்தை தழுவ வேண்டும் எனத் துன்புறுத்தப்பட்டனர். இதனை பொறுக்க முடியாத சுதேசிகள் கிளர்ந்தெழுந்தனர். அந்த வகையில் போர்த்துக்கேயப் படையினரையும் மதகுருமாரையும் கொலை செய்தனர். மதப் பணிபுரிவதற்கு வருகை தந்த கொச்சின் பிஷப்டொம் ஜோஜ்தரெமுடோ என்பவர் இதன் போது சுதேசிகளால் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணத்தவரது எதிர்ப்பலை நாளுக்கு நாள் வலுவடைந்து வருவதை கண்ட போர்த்துக்கேயப் படை யாழ்ப்பாணத்தை விட்டு நீங்கி மன்னார் சென்றடைந்தது.

இந்த வகையில் சுதேசிகளது போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கை வெற்றியளித்திருந்தாலும் அது சிறிதுகாலமே நிலைத்திருந்தது. ஏனெனில் சங்கிலி மன்னனது காலத்தின் பின்னர் யாழ்ப்பாண அரசில் அரசுரிமை தொடர்பாக குழப்ப நிலை நிலவி வந்தது. இவ்வேளையில் அரசுரிமையை பெற விரும்பியவர்கள் போர்த்துக்கேயரது உதவியை நாடி அவர்களது செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் ஏற்பட வழியமைத்துக் கொடுத்தனர்.

### புவிராச பண்டாரமும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகளும்

சங்கிலிமன்னன் கி.பி1561 ஆம் ஆண்டு மறைந்ததை தொடர்ந்து அவன் மகன் புவிராச பண்டாரம் ஆட்சிப் பொறுப்பை பெற்றிருந்தாலும் அவன் அரசிலிருந்து வெளியேற்றப்பட்டான். அதன் பின் போர்த்துக்கேயரது தலையீட்டுடன் அரசை பெறும் அவலமான நிலை ஆட்சியாளரிடையே தோற்றம் பெற்றிருந்ததுடன் அரசியல் ரீதியான குழப்ப நிலையும் தோற்றம் பெற்றிருந்தது.

இவ்வாறான அரசியல் குழப்பம் நிலவி வந்த வேளையில் சங்கிலியின் மகன் புவிராச பண்டாரம் மீண்டும் அரசுரிமையை கி.பி1582 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்டான். இவனும் போர்த்துக்கேயருக்கு எதிரான உணர்வு கொண்டவன் என்ற வகையில் மன்னாரில் இருந்த போர்த்துக்கேய படையுடன் 1590ஆம் ஆண்டு போரில் ஈடுபட்டான். இப்போர் அவனுக்கு வெற்றியாக அமையாவிடினும் போர்த்துக்கேயரை [illegible] கிலி கொள்ள வைத்திருந்தது.

மேலும் இவன் போர்த்துக்கேயருக்கு எதிரான தாக்குதலை தீவிரமாக முன்னெடுக்கும் வகையில் அவர்களது எதிரியான கள்ளிக் கோட்டை சமோரினிடம் படை உதவி பெற்றுக் கொண்டான். இவ்வாறு பெற்ற படையுடன் தனது படையையும் இணைத்து போர்த்துக்கேயருக்கு எதிரான போரை ஆரம்பித்த போது போர்த்துக்கேயர் தமது படை வீரரை பல பகுதிகளில் இருந்து பெற்று அப்படையெடுப்பை தோற்கடித்தனர். இதன் பின் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசை கைப்பற்றும் வகையில் தமென்டொங்கா என்ற தளபதி தலைமையில் கி.பி 1591 ஆம் ஆண்டு படையெடுத்து வந்து புவிராச பண்டாரத்தை கைது செய்து அவனை சிரச்சேதம் செய்த தன் மூலம் போரை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

இதன் பின் பெரியபுள்ளையின் மகன் எதிர்மன்ன சிங்கன் என்பவனை மன்னராக்கி வரலாற்றுச் சிறப்பு மிக்க "நல்லூர் உடன்படிக்கையை" மேற்கொண்டதன் மூலம் தமது செல்வாக்கை நிலை நாட்டிக் கொண்டனர்.

### எதிர்மன்ன சிங்கனும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகளும்

போர்த்துக்கேயரின் அனுசரணையுடன் ஆட்சிப்பீடத்தில் ஏறிய எதிர்மன்ன சிங்கன் ஆரம்பத்தில் போர்த்துக்கேயருக்கு சார்பாக நடந்து கொண்டாலும் காலப்போக்கில் போர்த்துக்கேயரது நடவடிக்கையால் அதிருப்தி கொண்டு அவர்களுக்கு எதிராக நடக்கத் தொடங்கினான். அத்துடன் இவன் இந்துக்களுக்கு ஆதரவாக செயற்படுபவனாகக் காணப்பட்டதனால் போர்த்துக்கேயரது எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டான். அதே வேளை போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டு வந்த கண்டி மன்னர்களான விமலதர்ம சூரியன், செனரத் ஆகியோருக்கு தென்னிந்தியாவிலிருந்து கிடைத்து வந்த படையுதவி, ஆயுத உதவி ஆகியவற்றை யாழ்ப்பாணத்தினூடாக கொண்டு செல்வதற்கு உதவி புரிந்து வந்தான். இவனது இவ்வாறான நடவடிக்கைகள் போர்த்துக்கேயருக்கு சந்தேகத் தையே ஏற் படுத்தி வந்தன. எனவே எதிர்மன்னசிங்கனை அரசிலிருந்து நீக்கும் எண்ணத்துடனேயே போர்த்துக்கேயர் காணப்பட்டனர்.

ஆனால் அவன் கி.பி 1617 ஆம் ஆண்டு மரணத்தை தழுவிக் கொண்டான்.அவனின் பின் அவனது மருமகன் சங்கிலி குமாரன் ஆட்சிப்பொறுப்பை பெற்றுக் கொண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டாரில்...

(வயது-24) என்ற ஒரு பெண் பிள்ளையின் தந்தையே உயிரிந்துள்ளார்.

நவக்கிரியைச் சொந்த இடமாக கொண்ட குறித்த இளைஞர் அல்வாய் மனோகராப் பகுதியில் மூன்று வருடங்களுக்கு முன்னர் காதல் திருமணம் செய்துள்ளார்.

ஒரு பெண் பிள்ளையின் தந்தையான குறித்த இளம் குடும்பஸ்தர் தொழில் நிமிர்த்தம் கட்டார் நாட்டுக்கு சென்று வாகன விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். (ம-7,60)

## எதிர்ப்புத்...

தென்னிலங்கை ஊடக அமைப்புக்களின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்படவுள்ள இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் அணி திரளுமாறு யாழ்.ஊடக அமையம் கோரியுள்ளது. (ம-7,33)

## எதிரான...

ஒவ்வொரு போயா தினமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் பொதுமக்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இன்று பௌர்ணமி தினத்தினை முன்னிட்டு வழிபாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் பொதுமக்களால் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. (ம-7)

## நயினை...

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

கும்பாபிசேஷக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்தனர்.

ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்களின் நலன் கருதி விசேட போக்குவரத்து ஏற்பாடுகள், சுகாதார வசதிகள் என்பன செய்யப்பட்டிருந்தன.

மேலும் குறிகாட்டுவானிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இலவச பேருந்து வசதியும் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## கிளிநொச்சி...

கிளிநொச்சி ஏ9 வீதி ஆனைபிறவுக்கு அண்மித்த பகுதியில் நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் எட்டு பேர் காயமடைந்துள்ளனர்.

மேலும் வீதிக்கு குறுக்கே நின்ற 9 எருமை மாடுகளும் விபத்தில் உயிரிழந்துள்ளது.

இதில் மண்டைதீவை சொந்த இடமாகவும் பாசையூரைச் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோண் பொஸ்கோ வித்தியாலய ஆசிரியையான மார்க் வெஸ்லி அலன் கத்தரின் (கவிதா) (வயது-50) என்ற மூன்று பிள்ளைகளின் தாய் உயிரிழந்துள்ளதுடன், இரண்டு சிறுவர்கள் உட்பட 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று வீதியில் சென்று கொண்டிருந்த எருமை மாடுகளுடன் மோதி, வீதியின் மறுகரைக்கு சென்று, எதிரே வந்து கொண்டிருந்த ஹயஸ் வாகனத் துடன் மோதியது. விமான நிலையத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்த ஹயஸ் வாகனமே விபத்துக்குள்ளாகியது.

வெளிநாடு செல்லும் கணவரையும் மகளையும் விமான நிலையத்தில் வழியனுப்பி விட்டு குறித்த ஹயஸ் வாகனத்தில் யாழ்ப்பாணம் நோக்கி திரும்பிக் கொண்டிருந்தபோது குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேலும் இவர்களில் எருமை மாடுகள் கொண்டு வந்த நபர் ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,100,315,316)

## அல்வாயில்...

வம் அல்வாய் பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் முத்து மாரியம்மன் கோவிலடி அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஜெயக்கொடி கார்த்திபன் (வயது- 30) என்ற இளைஞரே வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி பகுதியில் இயங்கும் குளிர்களி விற்பனை நிலையத்தின் நடமாடும் சேவையில் ஈடுபடும் வாகனம் ஒன்றில் அவர் விற்பனையில் ஈடுபட்டிருந்தபோது நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் மனோகரா விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் குளிர்களி வாங்குவதுபோல் பாசாங்கு செய்த இருவர் மேற்படி நபரின் தொலைபேசி மற்றும் பணப்பை என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மாலை 6.30 மணியளவில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இரவு 7.30 மணியளவில் அல்வாய் முத்து மாரியம்மன் கோவில் பகுதியில் 15 பேர் கொண்ட குழுவினர் அவரை சுற்றி வளைத்து வாளால் வெட்டியதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்படி நபர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமை தொடர்பில் கொள்ளையர்களுக்கு எவ்வாறு தகவல் சென்றது என்பது தொடர்பில் பெரும்விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## நாட்டை...

போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "நாட்டை பொருளாதார ரீதியாக வங்குரோத்தாக்கி, நாட்டு மக்களை மிகவும் நிர்க்கதியான எதிர்காலத்திற்கு ஆளாக்கிய தரப்பினர் யார் என்பதனை உயர் நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பின் ஊடாக வெளிக்கொணரப்பட்டது.

இந்த ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகளுக்குக் காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என வரிச்சுமைக்கு ஆளான மக்கள் கேள்வி எழுப்புகின்றனர் என்றார். (ம-7)

## உலகப்...

காலை 6 மணிக்கு பால்குடம் பவனி இணுவில் மருதனாம்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்.

காலை 9 மணியிலிருந்து 1008 சங்காபிஷேகம், சண்முகார்ச்சனை, விசேட பூஜை, அர்ச்சனைகள், அன்னதானங்கள், வழிபாடுகள் நடைபெறும்.

மாலை 6 மணியளவில் வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சண்முகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் 6.30 மணியளவில் உலகப் பெருமஞ்சத்தில் ஆரோகணித்து அருள் பாலிக்கவுள்ளார். (ம-7)

## மாங்குளத்தில்...

ளும் டிப்பர் வாகனமும் மோதியதிலேயே விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் வந்த ஆணும், பெண்ணும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.24
சீட்டிழுப்பு இலக்கம் 0195
W 7 3 3 1 0 6 W
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.01.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1399
U 12 20 60 68 U
Double Chance 51960

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3611
சீட்டிழுப்பு திகதி 24.01.2024
Q 41 50 54 58
Q 52989
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.24
சீட்டிழுப்பு இலக்கம் 0678
கடகம் 09 11 17 19 கடகம்
27170 08

மஹஜன சம்பத
திகதி 2024/01/24
சீட்டிழுப்பு இலக்கம் 5369
M 3 2 5 3 5 9
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1717
C 21 05 20 73 74
73681

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2189
வர்ணம் : ரோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2024.01.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,112,088/-
09 35 39 64 H
585349
DLB www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.01.2024 வெற்றி வாரம் 077 வர்ணம் பசுமை
H 7 9 4 1 1 5
93965
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,159,571.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2343 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.01.24 தினம் புதன்கிழமை
07 64 66 71 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,855,157.60
17804

சனிதா Shanida
திகதி 2024.01.24 வெற்றி வாரம் 4504
05 20 28 39 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,112,799.20
68321

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4055 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.01.24 தினம் புதன்கிழமை
10 27 44 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,210,480.00
307889

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 05 16 53 57 70
சீட்டிழுப்பு வாரம் 1519
24.01.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 497,101,236.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47

ஜயோதா Jayoda
திகதி 2024.01.24 வெற்றி வாரம் 1994 வர்ணம் மஞ்சள்
15 60 64 67 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,642,682.40
78272


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு

## நினைவுதின அழைப்பு

கடந்த 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று
இறைபதமடைந்த எங்கள் அன்புச் செல்வம்

**செல்வன்**


# ஜோசேப் அனோஜன்


(அனோச்)

( கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன், *DHL Warehouse Supervisor* )

தோற்றம்
**23.07.2003**

மறைவு
**05.02.2023**





மலர்ந்த பூவொன்று
வாசனையை பரவச் செய்து
வசந்தத்தை பறித்துச் சென்றது ...
நினைவுகள் நித்தம் வந்து
நிம்மதியை தொலைக்கின்றது...
வருமா மீண்டும் வசந்தம் என்ற
தொடரான கேள்விகளோடு தொடர்கின்றது
எம் கண்ணீர் பயணம்...

ஏக்கம் மட்டும் மிஞ்ச
நீர்த்துளிகள் நிறைகின்றன...
காலங்கள் கரைந்தாலும் ஆயிரம்
உறவுகள் எம் அருகில் இருந்தாலும்
எம் கண்களில் ஒளிரும்
உன் அன்பின் வெளிச்சம்...

உன்னைப் பிரிந்த நாள் முதல்
இன்று வரை, உன் அன்பிற்கு
இணை யாருமில்லை உன்
பாசத்திற்கு ஏங்கும் எங்கள்
ஏக்கங்கள் உணர முடியாத வலியாய்
எங்களை கொல்கின்றது.

நீ வருவாய் என்ற நம்பிக்கையில்
உன் பிரிவால் வாடும் குடும்பத்தினர்.!

உன் பிரிவால் துயருறும்
**உன் அண்ணா சனுாஜன்**

ஜோசேப் அனோஜன் அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (25.01.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இல. 582/56, சென்.செபஸ்ரியான் லேன்,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

(18747)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org